தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி ) செயல்முறைகள்

சென்னை –600 006

ந.க.எண்50422/கே/இ2/2021 நாள்18.04.2022

பொருள் பள்ளிக்கல்வி - 2021 –2022 ஆம் கல்வியாண்டு - மாணவ, மாணவியர் இடைநிற்றலை முற்றிலும் தவிர்த்தல் - சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் - அரசு/அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகள் (சுயநிதிப் பிரிவு நீங்கலாக) 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியர் - வங்கி கணக்கு விவரங்கள் கோருதல் - தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.141, பள்ளிக்கல்வித் ப.க.5(1)துறை, நாள் 13.09.2011.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.23927/பி1/இ3/2021 நாள் 10.04.2021.
3. அரசாணை (நிலை) எண்.61, பள்ளிக்கல்வித் ப.க.5(1)துறை, நாள் 25.03.2022.
4. சென்னை - 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (தொழிற்கல்வி) செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.50422/கே/இ2/2021 நாள் 30.11.2021.
5. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாணவர் எண்ணிக்கை விவரங்கள்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் (சுயநிதிப் பிரிவு நீங்கலாக) 10,11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ/மாணவியர் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் பார்வை (1)ல் கண்டுள்ள அரசாணையின்படி 2011–2012ஆம் கல்வி ஆண்டு முதல் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பார்வை (2)ல் கண்டுள்ள பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி 2021–2022ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் (சுயநிதிப் பாடப்பிரிவு நீங்கலாக) 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ/மாணவியரது எண்ணிக்கை விவரங்கள் பார்வை (5)ல் கண்டுள்ளவாறு அனைத்து முதன்மை கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டதன் அடிப்படையில் பார்வை (3)ல் கண்டுள்ள அரசாணையின்படி இத்திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வரசாணையில், இத்திட்டத்தினை

செயல்படுத்த 2011-2012 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் தொடர்புடைய மாணவ, மாணவியரின் பெயரிலான வைப்பீடு பத்திரங்கள் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தால் ( TamilNadu Power Finance and Infrastructure Development Corporation Limited) - ஆல் வழங்கப்பட உள்ளது.

எனவே மேற்படி வைப்பீடு பத்திரத்தில் மாணவ, மாணவியரின் பெயர் மற்றும் விவரங்கள் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளதால், ஒவ்வொரு பள்ளியிலும், வகுப்பு வாரியாக 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியரின் விவரங்களைக் கூர்ந்தாய்வு செய்து அவ்விவரங்களை இணைப்பில் கண்டுள்ள படிவங்களில் எவ்வித மாறுபாடு இன்றியும், எந்த கலமும் விடுபடாமலும் ஆங்கிலத்தில் Excel Sheet-ல் பூர்த்தி செய்து 26.04.2022-க்குள் jdvocational@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவிட்டு, அவ்விவரங்கள் பதிவு செய்யப்பட்ட குறுந்தகட்டினை வகுப்புவாரியாக பதிவு செய்யப்பட்ட மாணவ, மாணவியரின் பதிவு செய்யப்பட்ட வங்கி கணக்கு விவரங்களுடன் இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) பெயரிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

**மேலும் மேற்கண்ட விவரங்களைத் தயார் செய்யும் போது கீழ்க்கண்ட அறிவுரைகளை (Instructions) பின்பற்றி 10,11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியரின் விவரங்களை மிகத் துல்லியமாக பதிவு செய்யும் பணியினை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.**

1. படிவத்தில் உள்ள கலங்கள் எதுவும் விடுபடாமல் தயார் செய்வதுடன், ஒரே மாணவ/மாணவியரின் பெயர் இரண்டு முறை பதிவு செய்யக்கூடாது (பள்ளி ஆவணங்களின்படி ஒப்பீடு செய்யப்பட வேண்டும்)
2. மாணவ/மாணவியரின் வங்கி சேமிப்பு கணக்கு எண்ணில் முதல் இலக்க எண்."0"(Zero) என இருந்தால், அதனையும் சேர்த்து முழுமையான இலக்க எண்களைப் பதிவு செய்தல் வேண்டும் (இடைவெளியின்றி).
3. மாணவ/மணாவியரின் வங்கி சேமிப்பு கணக்கு எண். IFSC CODE, MICR NO. ஆகியவற்றை பதிவு செய்யும் போது "0" (Zero) என்பதற்கு பதிலாக "O" (ஓ) என்றும் "O" (ஓ) என்பதற்கு பதிலாக "0" (Zero) என்றும், "I" (ஐ) என்பதற்கு பதிலாக "1" (ஒன்று) என்றும், "1" (ஒன்று) என்பதற்கு "I" (ஐ) என்றும் பதிவு செய்யக்கூடாது.

4. மாணவ/மாணவியரின் வங்கி சேமிப்பு கணக்கு தற்போது உபயோகத்தில் உள்ளதா என மிக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட பணப்பரிமாற்ற விவரங்கள் பதிவு செய்யப்பட்ட வங்கி கணக்குப் புத்தக நகலைக் கொண்டு சரிபார்க்கப்பட வேண்டும்.
5. மாணவ/மாணவியர் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள வங்கி, வேறு வங்கியுடன் சேர்க்கப்பட்டிருந்தால், அவ்வங்கியின் பெயர் IFSC CODE NO. MICR NO. ACCOUNT NO. வங்கிக் கிளையின் அமைவிடம் ஆகிய விவரங்களை தொடர்புடைய மாணவர் அல்லது அவர்தம் பெற்றோரை நேரில் சம்பந்தப்பட்ட வங்கிக்கு சென்று அனைத்து விவரங்களையும் உறுதி செய்த பிறகு பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பதிவு செய்யப்பட வேண்டும்.
6. நடப்பு 2021-2022 ஆம் கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு பயின்று வரும் மாணவ/மாணவிகளுக்கு 10ஆம் வகுப்பில் பயின்றமைக்கானத் தொகை ரூ.1500/- 11ஆம் வகுப்பில் பயின்றமைக்கானத் தொகை ரூ.1500/- மற்றும் 12ஆம் வகுப்பில் பயின்றமைக்கானத் தொகை ரூ.2000/- ஆகிய விவரங்கள் சரியான கலத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதே போல் அரசு/அரசு உதவிபெறும் உயர்நிலை /மேல்நிலைப்பள்ளிகளில் 10ஆம் வகுப்பு பயிலாதவர்கள் (CBSE, MATRIC)மற்றும் சுய உதவிபெறும் பள்ளிகள்/பிரிவுகளில் பயின்ற மாணவ/மாணவியர்களக்கு எக்காரணத்தை கொண்டும் 10ஆம் வகுப்பிற்கான தொகை வழங்கப்பரிந்துரைத்தல் கூடாது.
7. **மாணவ, மாணவியரின் வங்கி சேமிப்பு கணக்குகள், அவர்கள் 12ஆம் வகுப்பு பயின்று முடிக்கும் வரை தொடர்ந்து நடைமுறையில் வைத்திருக்க வேண்டும் என மாணவ, மாணவியருக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.**
8. வைப்பீடு பத்திரத்தில் மாணவ, மாணவியரின் தலைப்பு எழுத்து, பெயர் முதலிய விவரங்கள் தவறாக பதிவு செய்யப்பட்டால், அதை மாற்றம் செய்து சிறப்பு ஊக்கத் தொகையினைப் பெறுவதில் சிரமம் ஏற்படும் என்பதால், இப்பணியினை மிகவும் விழிப்புணர்வுடன் மேற்கொள்ள வேண்டும்.
9. மாணவ, மாணவியரின் விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களில் தொடர்புடைய பள்ளி தலைமை ஆசிரியர்/தாளாளரின் கையொப்பத்தினைப் பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலகக் கோப்பில் பராமரித்தல் வேண்டும்.

எனவே, மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி 2021-2022 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்நிலை/மேல்நிலைப்பள்ளிகளில் (சுயநிதி வகுப்பு நீங்கலாக) 10,11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ/மாணவியரின்

விவரங்களை ஏதும் விடுபடாமல் இணைப்பில் கண்டுள்ள படிவங்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இவ்விவரப் படிவத்தில் தகுதி வாய்ந்த மாணவர் எவர் பெயரும் விடுபடவில்லை எனவும், யாருடைய பெயரும் இருமுறை பதிவு செய்யப்படவில்லை எனவும் சார்ந்தப் பள்ளித் தலைமையாசிரியர் உறுதிமொழி அளிக்க வேண்டும். அதனை மாவட்டக் கல்வி அலுவலர் உறுதி செய்து சான்றொப்பமிட வேண்டும். தவறு நேரிடின் பின் விளைவுகளுக்கு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு : – படிவம் I, II, III

இணை இயக்குநர் (தொழிற்கல்வி)
18/4/22
18.4.22

பெறுநர்,

அமைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்

நகல்

1. மாநில திட்ட இயக்ககம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை – 600 006. (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது).
2. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்

# SPECIAL CASH INCENTIVE 2021-2022

DISTRICT NAME :

## GOVERNMENT/GOVERNMENT AIDED (SELFINANCE CLASS EXCLUD STUDENTS)X STD

| SL NO | REGISTER NO | MANAGEMENT TYPE(GOVT./GO VERNMENT ADIDE/SELF FINANCE GROUP) | UDISE NO | SCHOOL NAME | EMIS NO | STUDENT NAME | BANK NAME | BRANCH NAME | ACCOUNT NO | IFSC CODE | MICR NO | MOBILE NO | STUDENT STUDIED AT | | | STUDENT CLAIMED AMOUNT | | | DETAILS OF LONG ABSENT IF ANY | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | XTH S | XI TH STI | XII TH STD | XTH STD | XI TH STI | XII TH STD | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

# SPECIAL CASH INCENTIVE 2021-2022

**DISTRICT NAME :**

## GOVERNMENT/GOVERNMENT AIDED (SELFINANCE CLASS EXCLUD STUDENTS)XI STD

| SL NO | REGISTER NO | MANAGEMENT TYPE(GOVT./GOVERNMENT ADIDE/SELF FINANCE GROUP) | UDISE NO | SCHOOL NAME | EMIS NO | GROUP CODE | STUDENT NAME | BANK NAME | BRANCH NAME | ACCOUNT NO | IFSC CODE | MICR NO | MOBILE NO | STUDENT STUDIED AT | | | STUDENT CLAIMED AMOUNT | | | DETAILS OF LONG ABSENT IF ANY |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | XTH STD | XI TH STD | XII TH STD | XTH STD | XI TH STD | XII TH STD | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |

DISTRICT NAME :

# SPECIAL CASH INCENTIVE 2021-2022

## GOVERNMENT/GOVERNMENT AIDED (SELFINANCE CLASS EXCLUD STUDENTS)XII STD

| SL NO | REGISTER NO | MANAGEMENT TYPE(GOVT./GOVERNMENT ADIDE/SELF FINANCE GROUP) | UDISE NO | SCHOOL NAME | EMIS NO | GROUP CODE | STUDENT NAME | BANK NAME | BRANCH NAME | ACCOUNT NO | IFSC CODE | MICR NO | MOBILE NO | STUDENT STUDIED AT | | | STUDENT CLAIMED AMOUNT | | | DETAILS OF LONG ABSENT IF ANY |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | XTH STD | XI TH STD | XII TH STD | XTH STD | XI TH STD | XII TH STD | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | |